ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## மாறனேரி நம்பி – வருஷதிருட்சத்திரம் - ஆனி – ஆயில்யம்

### தனியன்

மிதுநே ஸார்ப்பபே ஜாதம் யாமுநார்யபதாஸ்ரீதம் /
உத்தாரகம் யதீந்த்ரஸ்ய மாரநேரி குரும்பஜே //

யாமுநாசார்யஸச்சிஷ்யம் ரங்கஸ்தல நிவாஸிநம் /
ஜ்ஞாநபக்த்யாதி ஸம்பந்நம் மாரநேரிகுரும்பஜே //

### வாழித்திருநாமம்

ஆனிதனில் ஆயிலியம் அவதரித்தான் வாழியே
ஆளவந்தார் திருவடிகள் ஆச்ரயித்தோன் வாழியே
மாநிலம் எதிராசர்மனம் வாழ்வித்தோன் வாழியே
மதிளரங்கநகரமதில் வாழ்ந்தருள்வோன் வாழியே
தேனமரும் தென்மொழியின் சிறப்பறிந்தோன் வாழியே
திகழ்ஞான பக்திகளால் சேர்ந்திருப்போன் வாழியே
வானவரில் பொருவரிங்கு மகிழ்ந்துவந்தோன் வாழியே
மாறனேரி நம்பியிணை மலரடிகள் வாழியே.

இருப்பிடம் : கோயில்
ஆசாரியன் - ஸ்ரீஆளவந்தார்
அவதாரஸ்தலம் - பாண்டிய தேசத்தில் புராந்தகம் என்னும் கிராமம்

### மாறனேரி நம்பி வைபச்சுருக்கம்

ஆளவந்தார் சிஷ்யர்களில் ஒருவராய் சதுர்த்த (பஞ்சம?) வர்ணத்தில் பாண்டிய தேசத்தில் புராந்தகம் என்னும் கிராமத்தில் ஆனி மாதம் ஆயில்யம் நசஷத்திரத்தில் மாறனேரி நம்பி அவதரித்தார். இவர் ஆளவந்தாருக்கு ஏற்பட்ட ராஜபிளவையை அவரிடம் பிரார்த்தித்து ஆசார்யன் ப்ரசாதமாகப் பெற்றுக் கொண்டார் என்று கூறுவார்கள்.

இவர் அந்திமதசையில் ஆளவந்தார் உகந்த அடியேனது சரீரத்தை அவைஷ்ணவர்களான எனது உறவினர்கள் ஸம்ஸ்கரிக்கும்படி விட்டுவிடாதீர் என்று பெரிய நம்பியைப் பிரார்த்திதார். அதன்படி இவர் பரமபதித்தவுடன் பெரியநம்பி தாமே இவருக்கு ப்ரஹ்ம மேத ஸம்ஸ்காரம் செய்தார். இது தகுமோ ? என்று அசேஷபித்த எம்பெருமானாரிடம் ஸ்ரீராமபிரான் ஜடாயுவுக்கு ஸம்ஸ்காரம் செய்தார். தர்மபுத்ரர் ஸ்ரீவிதுரருக்கு ஸம்ஸ்காரம் செய்தார். ஜடாயுவையும், ஸ்ரீவிதுரரையும் காட்டிலும் இவர் தாழ்ந்தவர் அல்லர். தர்மபுத்திரரையும், ஸ்ரீராமபிறானையும் காட்டிலும் நான் பெரியவனும் அல்லன்.

இத்தைகைய அதிகாரிகள் விஷயத்திலாவது இதைச் செய்யாவிடில் ஆழ்வார் அருளிச்செய்த பயிலும் சுடெரொளிமூர்த்தியை (திருவாய்மொழி 3ஆம் பத்து 7ஆம் பாசுரம்) நெடுமாற் கடிமை செய்வேன்போல் (திருவாய்மொழி 8ஆம் பத்து 1ஆம் பாசுரம்) என்னும் திருமொழிகள் கடல் ஓசை போலே பொருளற்றவை ஆகிவிடாதோ? என்று அருளிச்செய்தார். உடையவரும் இதற்கு உகந்து இசைந்தார். (இதனை பின்பற்றியே பிற்காலத்தில் திருவாய்மொழிப்பிள்ளை தமது ஆசார்யரான விளாஞ்சோலைப் பிள்ளைக்கு சரம கைங்கர்யங்களைச் செய்தார்.)

பெரியநம்பி செய்த இக்கார்யத்தைக் கண்டு ஸ்ரீரங்கத்தில் இருந்த பலபேர் இவரைத் தள்ளி வைத்தனர்.

நம்பெருமாள் சித்திரைத்தேரில் எழுந்தருளி வரும்போது பெரியநம்பி திருமாளிகை வாசலில் தேர் புறப்படாமல் நின்று விட்டது. நம்பெருமாள் பெரியநம்பிக்கு அருளப்பாடிட்டு தீர்த்தம் ப்ரஸாதம் முதலானவை ஸாதித்து இவர் பெருமையை அனைவருக்கும் உணர்த்திய பின்பே அத்தேர் மேலே புறப்பட்டது என்று வரலாறு வழங்குகிறது.

<u>பொய்கையாழ்வார் அருளியுள்ள முதல் திருவந்தாதி முதல் பாசுரம்</u>

வையம்தகளியா வார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன் விளக்காக – செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழிநீங்குகவேயென்று.

இந்தப் பாசுரத்தின் வ்யாக்யானச் சுருக்கமும் மாறனேரி நம்பி அருளியுள்ள வார்த்தையும்

எம்பெருமானுடைய மகழ்ச்சியே தமக்கு உகப்பாக இவர் (பொய்கையாழ்வார்) நினைத்திருப்பதால், இவர் செய்த தெல்லாம், தமக்கு அலங்காரமாகவும் இனிமையாகவும் எம்பெருமான் நினைத்திருப்பதைச் சொன்னார். இப்படிப்பட்ட கைங்யர்யம் இதுவரை செய்யப்பெறாமையால் வந்த தாழ்வைப் போக்கி கொள்வதற்காக அடிக்கே சூட்டினேன் சொன்மாலை என்றார். அல்லது இப்படிப்பட்ட அறிவு இது வரை ஏற்படாததால் ஸம்ஸாரம் நித்தியமாகத் தொடரும் என்று எண்ணி அந்த இடரை நீக்கவேண்டும் என்று எம்பெருமானுடைய திருவடிகளில் பிராாத்துக் கொள்கிறார் என்றும் பொருள் கொள்ளலாம். இந்த பாசுரத்திற்காக மாறனேரி நம்பி அருளிச்செய்த வார்த்தை : எம்பெருமானை மறக்க விரகு (பொருள் - தந்திரம் அல்லது சூழ்ச்சி) இல்லையோ என்றார்.

மேலே சொன்ன விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி வெளியிட்டுள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி நூலில் இருந்தும் மற்றும் Dr.M.A.வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமி பதிப்பித்துள்ள நம்பிள்ளை படி இயற்பா வ்யாக்யான நூலில் இருந்தும் எடுக்கப்பட்டது.

மாறனேரி நம்பி திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: